திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்

MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)

Open Access & Peer Reviewed Journal

E-ISSN : 2583-0449

Sympathetic Mantras and Widows

Dr. B. Ponni

Head and Assistant Professor, Department of Tamil, The Standard Fireworks Rajaratnam College for Women (Autonomous), Sivakasi, India

Manuscript ID : **MT176A0104**

Volume : **3**

Issue : **1**

Month : **March**

Year : **2023**

Received: 05.12.2022
Revised: 27.01.2023
Accepted: 04.02.2023
Published: 08.02.2023

Pages : 17-23

DOI: 10.5281/zenodo.7619424

ABSTRACT:

Mantras and rituals are created by human beings to conquer nature. They are based on the beliefs of the people. Usually mantras are used in temples to worships gods and they control and some are built on faith. This research article examines the rituals and beliefs associated with widows through the literature on the Mantra sympathy.

KEYWORDS:

Sympathetic Mantras, Homoeopathic Mantras, Widows, Law of contact or contagion, Contagious Mantras

ஒத்துணர்வு மந்திரமும் கைம்மை மகளிரும்

முனைவர். பா. பொன்னி,
உதவிப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்,
தமிழ்த்துறை, தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராசரத்தினம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

மந்திரங்கள் இயல்பான மக்களின் அடிப்படையான எதிர்பார்ப்புகளையும், அவற்றை நிறைவேற்றத் துடிக்கும் மனித மனதின் உந்துதல்களையும் அடிப்படையாகக் கொண்டு அமைகிறது. சில சடங்குகள் அறிவின்பாற்பட்டதாகவும் சில சடங்குகளும் நம்பிக்கைகளும் நம்பிக்கையின் அடிப்படையிலும் கட்டமைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் சங்ககாலத்தில் கைம்பெண்களுக்கான விலக்குகளும், பழக்கவழக்கங்களும் மக்களின் நம்பிக்கையின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளன. சங்க காலத்தில் முதுசெம்பெண்டிரும் புதல்வரைப் பெற்ற பெண்களும் இணைந்து திருமணத்தை நடத்தி வைத்தனர் என்பதால் கணவரை இழந்தபெண்களும், குழந்தைகள் இல்லாத பெண்களும் முன்நிற்கவில்லை என்ற கருத்து பெறப்படுகின்றது. ஒத்தது ஒத்ததை உருவாக்குகின்றது என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே இவ்விலக்கு சங்ககாலத்தில் நிகழ்ந்துள்ளது எனக்கருத இடம் உள்ளது. மேலும் மகளிர் கணவன் இறந்த பின்னர் உயிருக்குப் பதிலாக கணவனுக்கே உரிமை உடைய கூந்தலை இழக்கின்றனர் என்பதையும் ஒத்துணர்வு மந்திரத்தின் (Homoeopathic Mantras) அடிப்படையில் ஆராய இயலுகின்றது.

கருச்சொற்கள்

ஒத்துணர்வுமந்திரம், கைம்மைமகளிர், மந்திரம், ஒத்தவிதி, தொத்துவிதி, கைம்மைநோன்பு, கூழைவிரித்தல்

முன்னுரை

இன்றைய நடைமுறை வாழ்வில் மந்திரம் என்பது பெருமளவு கோவில்களில் கடவுளர்களை வணங்கப் பயன்படுவதாகவும், தீயசக்திகளைக் கட்டுக்குள் வைத்திருக்க உதவுவதாகவுமே பெரும்பாலான மக்களால் அறியப்பட்டுவருகிறது. ஆனால் ஆதிகாலத்தில் இயற்கையைக்கண்டு அஞ்சியமனிதன் அவற்றை வெற்றி கொள்ளவே மந்திரங்களையும் சடங்குகளையும் ஏற்படுத்தினர் என்பர். இம்மந்திரங்களும் சடங்குகளும் பெரும்பாலும் மக்களின் நம்பிக்கைகளின் அடிப்படையிலேயே கட்டமைக்கப்பட்டன. அவ்வகையில் கைம்மைமகளிருடன் தொடர்புடைய

சடங்குகளையும் நம்பிக்கைகளையும் ஒத்துணர்வு மந்திரத்தின் அடிப்படையில் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

மந்திரம்

மந்திரம் என்பது மனிதனின் தேவையைப் பூர்த்தி செய்துகொள்வதற்காக மனிதனால் உருவாக்கப்பட்ட ஒன்றாகும். "மானிடவியலாரின் நோக்கின்படி இயற்கையின் இயக்கவிதிகளைப் புரிந்து கொள்ள இயலாத ஆதிமனிதன் இயற்கையைக் கட்டுப்படுத்தவும் அதனிடமிருந்து சில பயன்களைப் பெற்றுக் கொள்ளவும் உருவாக்கிய ஒன்றே மந்திரமாகும்"[1] என்று மந்திரம் குறித்துக் குறிப்பிடுவர்.

மந்திரங்களைப் பற்றிய கருத்துகள் இலக்கியங்களில் வெகுகாலத்திற்கு முன்பிருந்தே காணக்கிடக்கின்றன. இதனைத் தொல்காப்பியர்,

> **நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த**
> **மறைமொழி தானே மந்திரம் என்ப -** **(தொல். செய் நூ. 490)**

என்று குறிப்பிட்டுள்ளார். "புறத்தாருக்குப் புலனாகாமல் மறைத்துச் சொல்லும் சொற்றொடரெல்லாம் மந்திரமெனப்படும்"[2] என்று பேராசிரியர் மந்திரம் என்பதற்கு விளக்கம்தந்துள்ளார். மேலும், "ஒன்றைப் போலச் செய்வதன் வாயிலாக இயற்கையைக் கட்டுப்படுத்த முடியும் என்ற நம்பிக்கையின் (Imitation) அடிப்படையில் மந்திரம் பிறந்தது. பின்னர் போலச் செய்தலுடன் கட்டளையிடலும் (Command) இணைந்தது. இக்கட்டளையும் வேண்டுகோளாக அமைந்தது"[3] என்று மந்திரத்தின் வளர்ச்சி நிலைகளைக் குறிப்பிடுவர்.

மந்திரங்களின் வகைப்பாடு

பிரேசர் என்பவர் மந்திரங்கள் நிகழ்த்தப்படும் முறையினை அடிப்படையாகக் கொண்டு மந்திரங்களை இரண்டு வகையாகப்பகுக்கிறார்.

1. "ஒத்தது ஒத்ததை உருவாக்குகிறது (like produce like).
2. ஒரு தடவை தொடர்பு கொண்டிருந்தது எப்பொழுதும் தொடர்புகொண்டிருக்கும் (once in contact always in contact).

இவ்விரு கோட்பாடுகளின் அடிப்படையில் அவர் இரண்டு விதிகளை உருவாக்கினார். முதல் கோட்பாடு ஒத்தவிதி (Law of Similarity) எனப்படும். இதனுடன் தொடர்பு கொண்ட மந்திரமானது ஒத்தமந்திரம் (Homoeopathic Mantras) அல்லது பாவனைமந்திரம் (Imitative or Mimetic Mantras) என்றழைக்கப்படும்.

இரண்டாவது கோட்பாட்டை தொடர்பு அல்லது தொத்துவிதி (Law of contact or contagion) என்றழைத்தார். இவ்விதியுடன் தொடர்புடைய மந்திரம் தொத்துமந்திரம் (Contagious Mantras) ஆகும்.

புராதானச் சமுதாயத்தில் காணப்படும் மந்திரங்கள் அனைத்தும் இவ்விரண்டு பிரிவுகளில் ஒன்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும். இவ்விருவகை மந்திரங்களையும் பொதுவாக ஒத்துணர்வுமந்திரம் (Sympathetic Mantras) என்றே பிரேசர் அழைத்தார். ஏனெனில் அவர் கருத்துப்படி விளைவும் செயலும் இவ்விரு மந்திரங்களிலும் ஒத்திருக்கின்றன"[4] என்று பிரேசர் குறிப்பிடுகிறார். இதன் அடிப்படையில் நாம் சங்ககாலத்தில் நிலவிய கைம்மை மகளிர் தொடர்பான நம்பிக்கைகளை ஆராய இயலுகின்றது.

ஒத்தமந்திரம் அல்லது பாவனைமந்திரம்

ஒத்தது ஒத்ததை உருவாக்குகிறது என்பதே ஒத்த மந்திரத்தின் விதியாகும். "செயலும் விளைவும் ஒத்திருப்பது பாவனை மந்திரம் அல்லது ஒத்தமந்திரமாகும்"[5] என்று ஒத்த மந்திரத்தினை விளக்குவர்.

"விதவை, குழந்தைப் பேறற்ற பெண் ஆகியோரைக் குறித்துச் சில விலக்குகள் இன்றும் தமிழகத்தில் நிலவுகின்றன.

மங்கல நிகழ்ச்சிகளில் குறிப்பாகத் திருமணச் சடங்கில் விதவைகள் பங்கு பெறுவது ஒரு முக்கிய விலக்காக அமைந்துள்ளது"[6] என்று குறிப்பிடுவர். இவ்விலக்குகள் யாவும் ஒத்தது ஒத்ததை உருவாக்கும் என்ற ஒத்தமந்திரத்தின் அடிப்படையிலேயே தோன்றியுள்ளன எனலாம். இந்த அடிப்படையிலேயே சங்க காலத்தில் கணவனை இழந்த பெண்கள் மங்கல நிகழ்ச்சிகளில் பங்கு பெறாமல் ஒதுங்கி இருந்துள்ளனர். கணவனை இழந்த பெண்களை மக்கள் ஒதுக்கி வைத்தாக சங்க இலக்கியங்களில் குறிப்பு இல்லை. ஆனால் அகநானூற்றுப் பாடல் ஒன்று சங்க காலத்தில் திருமணம் நடைபெற்ற நிகழ்வினை விளக்கிச் செல்கிறது. அப்பாடலில்,

"பொது செய் கம்பலை முது செம் பெண்டிர்
முன்னவும் பின்னவும் முறை முறை தரத்தர
புதல்வற் பயந்த திதலை அவ் வயிற்று
வால் இழை மகளிர் நால்வர் கூடி" **(அகம். 86:9-12)**

என்ற பாடலடிகளில் முதுசெம் பெண்டிர் என்பதற்கு முதிய மங்கல மகளிர் என்று உரையாசிரியர் விளக்கம் தருகின்றனர். "எனவே அக்காலத்தில் மணத்தை மங்கலப் பெண்கள் செய்து வைத்தனர் என்க"[7] என்றும் குறிப்பிட்டுள்ளனர். முதுசெம் பெண்டிரும்

புதல்வரைப் பெற்ற பெண்களும் இணைந்து திருமணத்தை நடத்தி வைத்தனர் என்பதால் கணவரை இழந்த பெண்களும், குழந்தைகள் இல்லாத பெண்களும் முன் நிற்கவில்லை என்ற கருத்து பெறப்படுகின்றது. ஒத்தது ஒத்ததை உருவாக்குகின்றது என்ற அடிப்படையிலேயே இவ்விலக்கு சங்ககாலத்திலும் நிகழ்ந்துள்ளது எனக் கருத இடம் உள்ளது.

தொத்து மந்திரம்

இரு பொருள்களுக்கு இடையே உள்ள உறவை எளிதில் நீக்க இயலாது என்பதே தொத்துமந்திரத்தின் அடிப்படையாகும். “பொருள்கள் ஒருமுறை ஒன்றாகச் சேர்ந்திருந்துவிட்டால் அவற்றை எவ்வளவு தான் வேறாகப் பிரித்தாலும் அவை என்றும் ஒன்றாகவே இருக்கும். ஒன்றுக்கு ஏதாவது நடந்து விட்டால் அது மற்றவற்றையும் அதுபோல் பாதிக்கும் என்ற அளவுக்கு அவற்றில் உறவுகள் உறுதியாக நிலைபெறுகின்றன என்பது தொத்து மந்திரத்தின் அடிப்படையாகும்”[8] என்று குறிப்பிடுவர்.

“ஒரு வீரனின் மாமிசத்தை உண்பதால் அவ்வீரனின் வலிமை முழுவதும் வந்து சேரும் என்பதும், புலிப்பல் தாயத்து அணிந்து கொண்டால் புலியின் வீரம் முழுவதும் வந்து சேரும் என்று நம்புவதும் தொத்துமந்திரத்தின் அடிப்படையில் வளர்ந்த நம்பிக்கைகளாகும்”[9] இந்த அடிப்படையிலேயே சங்க காலத்தில் கணவனை இழந்து கைம்மை நோன்பு நோற்கும் பெண்கள் தங்களது கூந்தலை இழப்பதனை சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைக் கல்லாடனார் பாடியபோது,

“மெய்ம் மறந்து பட்ட வரையாப் பூசல்
ஒள்நுதல் மகளிர் கைம்மைகூர
அவிர் அறல் கடுக்கும் அம்மென்
குவை இருங் கூந்தல் கொய்தல் கண்டே” (புறம். 25:10-14)

என்று பாடுகின்றார். நெடுஞ்செழியனே நீ படையெடுத்துப் பகைவரை அழிப்பதால், பகைவர்களது மனைவியர் கைம்மையை மேற்கொள்ள வேண்டி கரிய தலைமுடியினைக் களைந்தார்கள் என்று, கைம்பெண்கள் கூந்தலைக்களைந்ததை எடுத்துரைக்கின்றார். கணவனை இழந்து கைம்மை நோன்பு நோற்கும் மகளிர் தம் உயிருக்குப் பதிலாக உயிருக்கு இணையான கூந்தலை இழக்கிறார்கள் எனலாம். இக்கருத்தினை உணர்ந்து கொள்ள மகளிரின் கூந்தலுக்கும் அவர்களது கணவருக்கும் இடையிலான உறவை அறிந்து கொள்வது முதன்மையாகிறது.

மகளிரும் கூந்தலும்

களவுக்கால மெய்ப்பாடுகள் குறித்துக் குறிப்பிடும் நிலையில் தொல்காப்பியர்,

“கூழை விரித்தல் காதொன்று களைதல்
ஊழணி தைவரல் உடைபெயர்த்து உடுத்தலொடு
ஊழி நான்கே இரண்டென மொழிப (தொல்., பொருள்., மெய்ப்., நூ-14)

என்ற நான்கினைக் குறிப்பிடுகிறார். இதில் கூழை விரித்தல் என்பது தலைவன் தலைவியின் மெய்யைத் தீண்டும் போது தலைமகள் தன் உள்ளத்தில் நிகழும் உணர்வினை மறைப்பாள். எனினும் அவளது உடலோடு தொடர்புடைய கூந்தல் நெகிழ்ந்துதாழும் என்று குறிப்பிடுவார். இதனால் பாலியல் நிலையில் கூந்தல் இடம் பெறுவதனை அறியமுடிகிறது. மேலும், பெண்களை வசியப்படுத்துவதற்குத் தேவையான பொருட்களில் அவர்களின் கூந்தலே முதலிடம் பெறுகிறது. “ஈழத்திலும் பெண்களை வசியப்படுத்த கூந்தல், மயிர், காலடி மண் என்பனவற்றையெடுத்து ஏனைய மருந்து மூலிகைகளுடன் சேர்த்து மருந்து அரைக்கப்படும்”[9] என்பர். இதன்வழி பாலியல் உணர்வில் கூந்தலின் முதன்மையை அறிந்து கொள்ள இயலுகிறது.

மகளிரின் கூந்தலுக்கும் அவர்தம் கணவருக்குமான தொடர்பு

சங்ககால மகளிருக்கும் அவர் தம் துணைவருக்குமான உறவில் மகளிரின் கூந்தல் முதன்மையான இடம் வகிக்கிறது. கொல்லேற்றினை அஞ்சாது தழுவுவோன் தலைவியின் கூந்தலில் துயில் கொள்ளும் உரிமையைப் பெறுவான் என்பதனை,

ஒள்ளிழை வார்உறு கூந்தல் துயில்பெறும் (கலி. 104:20)

என்ற அடியால் அறியலாம். தலைவன் பரத்தைவயிற் பிரிகின்ற நிலையில் அவனுடன் ஊடல் கொள்ளும் தலைவி என்னுடைய கூந்தலைத் தீண்டாதே என்று குறிப்பிடுவதனை,

ஒரூஉநீ எம்கூந்தல் கொள்ளல் - யாம்நின்னை
வெரூஉதும் காணும் கடை (கலி. 87:1-2)

என்ற பாடல் அடிகளால் அறிய முடிகின்றது. மேலும் தலைவியின் கூந்தல் தலைவனை அன்றி பிறருக்கு எளியதாக இல்லாமல் இருப்பதனை,

குமரி மகளிர் கூந்தல் புரைய
அமரின் இட்ட அருமுள் வேலிக்
கல்லென் பாசறை (புறம். 301:2-4)

என்ற அடிகளால் அறியலாம். மேலும், சங்க காலத்தில் வெற்றி பெற்ற மன்னர்கள் தோற்ற மன்னர்களின் உரிமை மகளிரின் கூந்தலை அரிந்து தேரில் பூட்டிய செய்தியைக் காணமுடிகிறது.

வேந்தர் ஓட்டிய ஏந்துவேல் நன்னன்
கூந்தல் முரற்சியின் கொடிதே (நற். 270:9-10)

என்ற பாடல் அடிகள் இதற்குச் சான்றாக அமைகின்றன. போரில் வெற்றி பெற்ற மன்னன் தோல்வி அடைந்த மன்னனை இழிவு செய்யும் வகையில் அவன் உரிமை மகளிரின் கூந்தலை கைப்பற்றுவதனை இதன்வழி அறியலாகின்றது. இதன் காரணம், தலைவியின் கூந்தலைத் தீண்டும் உரிமையும், தலைவியின் கூந்தலில் துயிலும் உரிமையும் தலைவனுக்கே உரியதாக இருந்துள்ளது. அக்கூந்தலை எதிரி மன்னன் கைப்பற்றுவதன் வழி தோற்ற மன்னனை அவமானப்படுத்தும் முயற்சியே இஃது எனலாம். இவற்றின் வாயிலாகத் தலைவியின் கூந்தல் தலைவனுக்கு மட்டுமே உரிமையானது. தலைவியின் கூந்தலைத் தீண்டும் உரிமை தலைவனுக்கு மட்டுமே உரியது. பாலுணர்வில் தலைவியின் கூந்தல் முதன்மையான இடத்தை வகிக்கிறது என்பன போன்ற தலைவியின் கூந்தலுக்கும் தலைவனுக்கும் இடையிலான தொடர்பினை அறிந்து கொள்ளமுடிகிறது.

ஒருவனுடைய முடி, நகம் போன்றவற்றிற்கு (உடலோடு ஒட்டிய உடைமைகளுக்கு) பாதிப்பை உண்டாக்கினால் அப்பாதிப்பு அவனுக்குச் சென்று சேரும் என்னும் நம்பிக்கை தொத்து மந்திரத்தின் பாற்பட்டது. வீரனின் மாமிசத்தை உண்டால் அவனது வீரம் தனக்கு வந்து சேரும் என்பதும், புலிப்பல் தாயத்து அணிந்து கொண்டால் புலியின் வீரம் முழுவதும் நமக்கு வந்து சேரும் என்று நம்புவதும் இதன் அடிப்படையே எனலாம். அந்த அடிப்படையில் கணவன் இறந்த பின்னர் உயிருக்குப் பதிலாக கணவனுக்கே உரிமை உடைய கூந்தலை மகளிர் இழக்கின்றனர் எனவும் கருத இடம் உள்ளது.

முடிவுரை

மந்திரங்கள் இயல்பான மக்களின் அடிப்படையான எதிர்பார்ப்புகளையும், அவற்றை நிறைவேற்றத் துடிக்கும் மனித மனதின் உந்துதல்களையும் அடிப்படையாகக் கொண்டு அமைகிறது. சில சடங்குகள் அறிவின்பாற்பட்டதாகவும் சில சடங்குகளும் நம்பிக்கைகளும் நம்பிக்கையின் அடிப்படையிலும் கட்டமைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் சங்ககாலத்தில் கைம்பெண்களுக்கான விலக்குகளும், பழக்கவழக்கங்களும் மக்களின் நம்பிக்கையின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளன என்பதனை இதன் வழி அறிந்து கொள்ளமுடிகிறது.

சான்றெண் விளக்கம்

1. ஆ. சிவசுப்பிரமணியன், மந்திரமும் சடங்குகளும், ப.23.
2. பேராசிரியர் (உரை), தொல்காப்பியம், பொருளதிகாரம், ப.391
3. முனைவர் தே. ஞானசேகரன், மக்கள் வாழ்வில் மந்திரச்சடங்குகள், ப-3
4. ஆ. சிவசுப்பிரமணியன், மந்திரமும் சடங்குகளும், ப.36
5. முனைவர் தே. ஞானசேகரன், மக்கள் வாழ்வில் மந்திரச்சடங்குகள், ப-6
6. ஆ. சிவசுப்பிரமணியன், மந்திரமும் சடங்குகளும், ப.37.
7. பேராசிரியர் புலவர் அ. மாணிக்கம், சங்க இலக்கியங்கள் மூலமும் உரையும், அகநானூறு முதல் பகுதி, ப-428.
8. ஆ. சிவசுப்பிரமணியன், மந்திரமும் சடங்குகளும், ப.39.
9. மேலது., ப.43.
10. மேலது., ப.43.

துணைநூற்பட்டியல்

1. ஆ, சிவசுப்பிரமணியன். *மந்திரமும் சடங்குகளும்.* நாகர்கோவில், காலச்சுவடு பதிப்பகம், 2016.
2. தே, ஞானசேகரன். *மக்கள் வாழ்வில் மந்திரச் சடங்குகள்.* சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2009.
3. அ, மாணிக்கம். *சங்க இலக்கியங்கள் மூலமும் உரையும் அகநானூறு முதல் பகுதி.* சென்னை, வர்த்தமானன் பதிப்பகம், 2007.
4. கழக வெளியீடு, (பேராசிரியர் உரையுடன்). *தொல்காப்பியம், பொருளதிகாரம்.* சென்னை, சைவ சித்தாந்த நூற்கழகம், 1966.

REFERENCES

1. A, Siiva Subramaniyan. *Manthiramum Sadangugalum*. Nagarkovil, Kalasuvadu Publications, 2016.
2. T, Gnanasekaran. *Makkal Vazhvil Manthira Sadangugal*. Chennai, NCBH Publication, 2009.
3. A, Manikkam, *Sanga Ilakkiyangal Moolamum vurayum Aganandooru part one*. Chennai, Varthamanan Publications, 2007.
4. Kalaga Velidu. (Text editor). *Tholkappiyam, Porulathigaram*. Chennai, Saiva Sithantha Norkalagam, 1966.